RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1844

# உளவியல் நோக்கில் சக்தி ஜோதியின் மூங்கிலரிசி வெடிக்கும் பருவம்

**பூ. தங்கம்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சாத்தூர்-626203, தமிழ்நாடு, இந்தியா.

# Shakti Jyoti's Psychological View of Bamboo Rice Bursting Season

**P. Thangam** [a, *]

[a] Department of Tamil, Government Arts & Science College, Sattur-626203, Tamil Nadu, India

* Corresponding Author: thangamprt@gmail.com

Received: 12-08-2022
Revised: 30-10-2022
Accepted: 09-11-2022
Published: 08-12-2022

Check for updates

**ABSTRACT**

Psychology is the study of the human mind. Psychologists point out that the reason for physical diseases and nerve disorders in a man are his mental problems. Humans life is naturally filled with full of desires and humans live their life to fulfill it. But because of culture and civilization humans get compressed. At an early age, the mind becomes divided into the conscious mind and the unconscious mind, and then the conscious mind absorbs everything. Morality bores them out. Thus, unfulfilled desires are accumulated in consciousness. The memories that are collected in this way are fulfilled in dreams. Although the memories are created by the creator in conscious state, they can be considered as dreams, which are called daydreams. All poems are reflections of daydreams. From the psychological point of view, sexual desire is found in abundance in Shakti Jyoti's poems. In this article the adaptability, self-defence, and cultural nature of the female are well explained.

**Keywords:** Psychology, Libido, Sexuality, Night, Body Door, Achille Odor

## முன்னுரை

மனிதர்களின் செயல்பாடுகள் யாவும் பாலுணர்ச்சியால் தூண்டப்படுவது என்று உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். குழந்தையாக இருக்கும் போது மனம் பிளவுபடுவதில்லை. வளர வளர மனம் பிளவுற்று வேட்கைகள் அனைத்தும் நிறைவேறாத நிலையில் அவை நனவிலி மனத்தில் சேகரமாகின்றன. நனவு மனத்திற்கு அறியப்படாத விருப்பங்கள் யாவும் அமுக்கப் பெற்று சேகரிக்கப்படுவதே நனவிலி மனம் ஆகும். மனிதர்களின் பாலியல் உந்தம் லிபிடோ என அழைக்கப்படுகிறது. பாலுந்தம் என்பது மனிதர்களுக்கு பசி, தாகம் போல நிறைவேற்றப்பட வேண்டிய விருப்பம் ஆகும். அது நிறைவேற்றம் அடையாத போது அமுக்கத்திற்கு உள்ளாகிறது. எனவே மனதர்களிடம் நரம்புப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவ்வாறு அமுக்கத்திற்கு உள்ளான விருப்பங்களே கனவுகளாக வெளிப்படுகின்றன. கனவுகள் பகல் கனவு, இரவுக் கனவு என இரு வகையில் மனிதர்களுக்கு நேர்கின்றன. இவ்விரு வேளைகளிலும் வரும் கனவுகளுக்கு பொருள் இருப்பதாக உளவியலார் குறிப்பிடுகின்றனர். கனவு மூலம் விருப்ப நிறைவேற்றம் மனிதர்களுக்கு நிறைவேறுவது போல படைப்புகள் வழியும் அமுக்கப்பட்ட நினைவுகள் வெளிப்படலாம். ஒரு படைப்பாளியின் கனவு போலவே அவரது படைப்பும் கருதப்பட வேண்டும். கவிதை என்பது பகல் கனவு போலவும் கதைகள் இரவுக் கனவு போலவும் கருதப்படுகின்றன. உளவியலில் விருப்ப நிறைவேற்றத்தின் ஒரு வடிகாலே கனவு எனப்படுகிறது. அது போலவே படைப்புகளும் விருப்ப நிறைவேற்றத்தின் ஒரு விளைவேயாகும். அடக்கப்பட்ட உணர்வுகளின் வெளிப்பாடாக படைப்புகளைக் கருதும் வகையில் கவிதைகள் நிறைவேறாத விருப்பங்களைக் கொண்டிருக்கக் கூடும் என்பர். பெண்

கவிஞர்களின் கவிதைகளிலும், ஆண் கவிஞர்களின் கவிதைகளிலும் வேறுபாடுகள் பல காணப்படுகின்றன. ஆண் கவிஞர்களின் பாடல்களில் வெளிப்படையாகவே பாலுந்த விளைவுகள் காணப்படுகின்றன. ஆண் காயடிப்பு, இடிபஸ் சிக்கல் ஆகியனவும் காணப்படுகின்றன. பெண் கவிஞர்களின் கவிதைகளில் பாலுந்தம் மறைபொருளாய் வெளிப்படக் காணலாம். ஆண்குறி ஏக்கம், தந்தைக் காமம் ஆகியனவும் வெளிப்படக் காணலாம். ஆண், பெண் என்னும் இரு பாலினரே உலகில் இருக்கக் காணலாம். பண்பாடுதான் உறவுகளாக மனிதர்களைப் பகுக்கின்றன. தந்தை, மகள், அண்ணன், தம்பி, தங்கை, அக்காள் என உறவு முறைகள் மூலமே ஆண் காயடிப்புநிகழ்கிறது. ஒரு பெண் தன் தந்தையின் மேல் கொண்ட காமத்தை வெவ்வேறு விதத்தில் வெளிப்படுத்தக் காணலாம். தாயின் மேல் வெறுப்பினைக் காட்டலாம். தாயைக் கொல்லும் நிலைக்குக் கூடச் செல்லலாம். அது போல மகன் தாய் மேல் கொண்ட காமத்தினால் அதற்குத் தடையாக இருக்கும் தந்தையை வெறுக்கலாம். தாய், தந்தை வெறுப்பு என்பது பால் உந்தத்தின் விளைவாகும். இவ்வாறு பண்பாட்டு அடிப்படையில் ஆண், பெண் பால் இச்சையானது வெளிப்படும் விதமானது தடுக்கப்படுவதால் அவை கனவு மற்றும் படைப்புகள் வழியாக வெளிப்பட ஏதுவாகிறது. இக்கட்டுரையானது பாலுந்தம் என்பது அமுக்கப்பட்ட நிலையில் படைப்பில் வெளிப்படுவதை கவிஞர் சக்திஜோதியின் கவிதைகள் வழி எடுத்துரைக்கிறது.

## பாலுந்தம் அல்லது லிபிடோ

உளவியலில் மனித உயிர்களின் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் பாலுந்தமே அடிப்படை என்பதைக் கூறுகின்றன. பாலியல் என்பது பசி, தாகம் போன்ற ஓர் உணர்வாகும். பாலுமை என்பது குழந்தையிலிருந்தே தொடக்கம் பெறுகிறது. முதிர்ச்சியான பாலியல் வேட்கைக்கு குழந்தைப் பாலுமையே அடிப்படையாகிறது. “வாய்வழிச் செயல்களாகிய உண்ணுதல், பேசுதல், புகைத்தல், சூப்புதல், குடித்தல் போன்ற அனைத்தும் பாலின்பத்திற்கான துணைமை ஆதாரங்களாகின்றன.” (Ravichandran, 2011). அதனால்தான் திருவள்ளுவர் “கண்டுகேட்டுஉண்டுஉயிர்த்துஉற்றறியும்ஐம்புலனும் ஒண்டொடிகண்ணேஉள” என்று காமத்துப் பாலில் சுட்டினார் எனலாம் (Varatharajan, 2013). பசி, தாகம் ஆகியனவற்றை நிறைவேற்றுவது போலவே பாலுந்தமும் மனதில் அமுக்கப்பட்டு கனவாகவும், படைப்பாகவும் நிறைவேற்றம் பெறுகிறது.

## படைப்பும் கனவும்

பொதுவாக கதைகள் மனித ஆளுமையை வளர்க்கச் செய்யும் பண்புள்ளவை. கதைகளை மனிதர்கள் படிக்கக் காரணம் அதனுள் தனக்கான வடிகாலைக் கண்டடைதல்தான் எனலாம். இலக்கியம் என்பது தெரிநிலைக் கனவு என்று ப்ராய்ட் குறிப்பிடுவார் “படைப்பாளிகள் புனைவாக்கத்தில் தெரிநிலைக் கனவு காண்கின்றனர். அதாவது இராக் கனவில் காணவேண்டிய கனவைப் புனைவில் (பகற்கனவில்) காண்கின்றனர். தமது விருப்பத்துக்கு ஏற்ப இந்தக் கனவோட்டத்தை இயக்குகின்றனர். எனவே இந்தக் கனவில் முழு கட்டுப்பாடு இவர்கள் நனவு நிலையில் உள்ளது. அப்படியிருந்தும் இந்தப் படைப்பு என்பது கனவே ஆகும். இதைக் கொண்டு இலக்கியத்தை வெறும் கனவு என்று சுருக்கி விடவோ ஒதுக்கி விடவோ கூடாது” என்று குறிப்பிடுகிறார் (Ravichandran, 2019). கனவை பகுத்தாய்ந்தால் அமுக்கப்பட்ட நனவிலி மனதின் விருப்பங்கள் வெளிப்படும் என்பதை அறிந்து கொள்ளும்வழியினையே ப்ராய்ட் வழங்கினார். கவிதைகளைப் படைப்போர் சிறு குழந்தைகளுக்கு ஒப்பாவர் என்று கூறினார். குழந்தைகள் சிறு பொருட்களை வைத்து விளையாடுவதைப் போலவே படிமங்களைக் கொண்டு புனைவாக்கத்தில் ஈடுபடுபவர்கள் கவிஞர்கள் என்றார். “இந்த இடத்தில் புனைவை ப்ராய்ட் பகற்கனவுடன் ஒப்பிடுகின்றார். படைப்பாளிகள் பகற்கனவில் திளைப்பவர்கள். அவர்களின் அமுக்கப்பட்ட ஆசைகளும் இரகசிய வேட்கைகளும் இப்பகற்கனவு மூலம் புனைவாக்கம் பெற்று நம்மையும் ஈர்க்கின்றன” எனக் குறிப்பிடுவதிலிருந்து கனவையும் படைப்பாளியையும் பிரிக்க முடியாது என்பதை உணரலாம் (Ravichandran, 2019). இதனை “இயல்பூக்க உணர்வுகளின் கிடங்காக விளங்கும் இந்த நனவிலியில் குழந்தைப் பருவத்திலிருந்து அமுக்கப்பட்ட எண்ணங்களும் உறைகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த நனவிலி மன உணர்வுகளே மனக் கற்பனை ஆக்கத்திற்கு அடிப்படையாகிறது.”

என்று நனவிலி மனத்தின் அமுக்கப்பட்ட உணர்வுகளே படைப்பாக்கத்திற்கு அடிப்படையாக அமைகின்றமையைக் குறிப்பிடுகிறார் (Nalangilli, 2019).

## கவிஞர் சக்திஜோதி

ஜோதி என்னும் இயற்பெயர் கொண்ட கவிஞர் சக்திஜோதி தனது கணவரின் பெயரின் பாதியை முன்னொட்டாக வைத்துக் கொண்டு பாலுந்த விழைவிலிருந்து தப்பித்துக் கொள்ளும் பாலியல் நிறைவேற்றத்தை பெயரிலேயே கொண்டவர் ஆவார். தமிழில் தற்போது எழுதி வரும் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்க கவனத்தைப் பெற்றவராகத் திகழ்கிறார். இவர் இளம் தலைமுறையினர் பலரை சுயதொழில் செய்வதற்குப் பயிற்றுவித்து அவர்களின் வாழ்விற்கான வாழ்வாதாரத்தை ஏற்படுத்தி செயல்படுத்தி வருபவராகவும் இருக்கின்றார். விவசாயத்தைப் பின்னணியாகக் கொண்ட இவரிடம் கவிதைகள் நீர்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு எழுகின்றன. ஆறு, குளம், தண்ணீர் என்பன பாலியல் விழைவின் குறியீடுகளாகும் என்பார் ப்ராய்ட். ஆனால் சங்க இலக்கியத்தில் தலைவன், தலைவி இடையே உள்ள உறவைப் பிரிப்பதில் காட்டாறுகள் தந்தையைப் பதிலீடு செய்வது போல குறுக்கிடுகின்றன எனக் குறிப்பிடுகிறார். “ஒரு தலைவன் இரவுககுறிக்கு வந்து கொண்டிருக்கும் போது காட்டாறு குறிக்கிடுகிறது (Nalangilli, 2019). சங்கப் பாடல்களை நோக்கும் போது இவை புணர்ச்சிக்கானத் தடைகள் பற்றிய விவரம் என்பது வெளிப்படை” என்கிறார் (Nalangilli, 2019). காட்டாறுகள்தான் புணர்ச்சித் தடைக்கு குறியீடாக அமைகின்றன. பிற நீர்நிலைகள் அமைதியான புணர்ச்சிக்கு ஆதராமாக இருப்பவை. குளம், கடல் போன்ற நீர் நிலைகளுக்கு அருகே தலைவன் தலைவி புணர்ச்சி நிகழ்வது சுட்டப்படுகிறது. எனவே இது போன்ற நீர்நிலைகள் ஆண், பெண் புணர்ச்சியை குறியீடாக உணர்த்தக் கூடியவை எனலாம். “நிலத்தைப் பெண்ணாகப் பார்ப்பது மரபு. நிலம் எனும் நல்லாள் என்பது வள்ளுவம். பூமாதேவி என்பது புராணம். நிலத்தைப் பெண்ணாகவும், மழையைப் பேராண்மையாகவும், காண்பது மழையானவள் எனும் கவிதை மழையைத் தான் உடல் திறந்து பருகத் தொடங்குகிற நிலம் படிமம் நன்றாக உருவாகி வருகிறது” (சக்திஜோதி, 2009) என்ற நாஞ்சில் நாடனின் கருத்தானது மழை, நிலம் ஆகியன புணர்ச்சியை உணர்த்தும் வகையில் அமைவதை படிமமாக சக்திஜோதி வெளிப்படுத்துகிறார் எனக் கூறுகிறார். இவருடைய கவிதைகள் எளிமையானவை விசகசிக்கத்தக்கவை இவருடைய பார்வையும் தனித்துவமானது. கட்டுரை நூல்களும், தொடர்களும் எழுதி வருகிறார். இவருடைய சங்கப் பெண் கவிதைகள் என்னும் நூல் சிறப்புக் கவனம் பெற்ற ஒன்றாகும்.

## கவிதைகளில் பாலுந்த விழைவு

கவிஞர் சக்திஜோதி தன் கவிதைகளில் பாலியல் சொற்கள் எதையும் பயன்படுத்தாதவர். பெண் தன்னைத் தானே மோகிக்கும் மனநிலைக்கு ஆட்படாதவர். ஆயினும் அவரது கவிதைகள் தந்தைக் காமம், தாய் வெறுப்பு ஆகியனவற்றையும் பாலுந்த விழைச்சையும் இயல்பாகக் கொண்டுள்ளன. அமுக்கப்பட்ட விருப்பங்களின் விளைவே இக்கவிதைகள் எனலாம். அவரது கவிதைத் தொகுப்பான மூங்கிலரிசி வெடிக்கும் பருவம் என்னும் கவிதைகளில் இதை உணரலாம். படைப்பு மொழியில் துன்பம் என்பது இன்ப விழைவின் படிமம் ஆகும். துறவு என்பது காமத்தின் படிமம் என்று குறிப்பது போலக் கருதலாம்.

“துயருற்ற மனதின் இயலாமையை

உணர்கையில்

செய்ய வேண்டியது ஒன்றுமில்லை

பழமையான நாட்டுப் பாடலொன்றின்

சொல்லெடுத்துப் பாடலாம்

அல்லது பண்டைய கடலோடியின்

உப்புப் படிந்த இசைக்குறிப்பொன்றை

வாசிக்கலாம்

அப்போது

முந்தைய காலத்தின் இசை

இடம்பெயர்ந்து

மனதில் படிந்திருக்கும்"

என்னும் கவிதையில் அமுக்கப்பட்ட நினைவுகள் பற்றிக் கூறுகிறார். உப்புப் படிந்த இசைக் குறிப்பொன்று என்பது கடல் என்னும் காம விழைவைக் கடக்கும் கப்பலை இயக்கும் விருப்ப நிறைவேற்றம் ஆகும் (Sakthi Jothi, 2016). துயருற்ற மனதின் இயலாமை என்பது விருப்ப நிறைவேறாமையினால் பாதிப்புக்கு உள்ளாகும் மனதின் வெளிப்பாடு. கையறு நிலையில் அதை எதிர்கொள்ளும் ஆற்றலை மனதிற்கு அளிப்பது இன்ப நிறைவேற்றம் ஆகும். பழமையான நாட்டுப் பாடல் என்னும் பூர்விக மனிதத் தன்மைக்குத் தன்னைத் தாழ்த்திக் கொள்ளும் பாங்கினை வெளிப்படுத்தும் சொல்லும்இதில் காணப்படுகிறது. பண்டைய, பழமையான, முந்தைய என்னும் சொற்கள் குழந்தைப் பாலுமைமையை வெளிப்படுத்தும் சொற்களாகும். முதிர்வுறாத இன்ப விழைவினைக் குறிக்கும். அது நிறைவேறாமல் நனவிலியில் படிந்திருக்கும் என்பதையே முந்தைய காலத்தின் இசை மனதில் படிந்திருக்கும் என்று குறிப்பிடப்படுகிறது.

இது போல் பிறிதொரு கவிதையானது உடலைக் கடலாக எண்ணும் பாங்கு வெளிப்படுகிறது. இதுவும் அடிப்படையில் பாலுந்தத்தின் வெளிப்பாடாகும்.

"கொந்தளிக்கும் குமிழிகள்

ஓரப் பாறைகளில் மோதிச் சிதறும் உரசலில்

தன்னைக் கரைத்துக் கொள்கிறாள்

காற்றின் பேரலைவில்

எல்லையற்று விரிகிறது

உடலுக்குள் கடல்

எப்போதும் மணக்கிற அலை வெளியில்

ஒரு கணம் தாபம்

மறுகணம் துயரமென

நுரையமிழ்ந்துயர

ஒளிர்ந்து பிரகாசிக்கின்றன

உப்புத் திவலைகள் அவளுக்குள்"

என்னும் கவிதையும் பெண்ணின் பாலுந்தத்தைக் குறிப்பதாக அமைகிறது, பெண்ணின் உடல் கடலுக்கு ஒப்பிடப்படுவதன் மூலம் கடக்கப்பட முடியாத இன்ப விழைச்சுக்கு ஆளாகும் தன்மை கூறப்படுகிறது. முதிர்வுற்ற இன்ப விழைவின் அடிப்படையே ஆணினால் ஆட்கொள்ளப்படும் தன்மையாகும். ஓரப்பாறை, மோதிச் சிதறுதல், தன்னைக் கரைத்துக் கொள்ளுதல் என்பன இன்ப விழைவின் செயல்பாடுகளை உணர்த்துகின்றன. ஆண், பெண் இருவருள் நிகழும் இன்பப் பாய்வுகள் ஒரு கணம், வேதனையைத் தரக் கூடியதாகவும் அமையும் எனவே இக்கவிதை ஆண், பெண் இருவருக்கும் இடையிலான இன்ப நாட்டத்தை அதன் நிறைவேற்றத்தைக் குறித்து நிற்கின்றன. உப்புத் திவலைகள் என்பன உயிர்நீரினைக் குறித்து நிற்கிறது (Sakthi Jothi, 2016).

நனவு மனத்திற்கும் கனவு வெளிப்பாட்டிற்கும் இடையிலான மனநிலையினைக் கொண்ட கவிதை,

“தீண்டலின் எல்லை

தொலை தூரம் என்றாலும்

சட்டென்று

அவன் வந்து விடுவான்

வந்தது போல் மறைந்தும் விடுவான்

அதன்பின்

உன்மத்தம் பொங்கி

மூடிய கண்களுக்குள் தொலைந்து போகவுமான

கிளர்ந்த நிலையில் இருக்குமவளிடம்

அவன் வந்து சென்ற தடயம்

எதுவுமில்லை

காதலில் நலிந்த அவளின் மனதைத் தவிர”

என்னும் கவிதையில் நனவு நிலையில் கனவைப் படைத்தல் என்பதாக அமைகிறது. கனவில் நனவின் ஆதிக்கம் மிகுவதைக் காணமுடிகிறது (Sakthi Jothi, 2016). உன்மத்தம் பொங்குதல் என்பது காம உணர்வு பொங்குவதைக் குறிப்பதாகும். அவளைக் கூடிச் சென்ற தலைவன் வந்து சென்றதை அறிவிக்கும் தடயம் இன்மையால் பாலுந்தம் பெற்றிருக்கிறாள். அந்த நிலையில் அவள் மனம் வேட்கையை மனதில் தேக்கி வைப்பதற்குத் தூண்டப்படுகிறாள். இதனால்தான் அவள் மனம் நலிந்து சோர்ந்து போகிறது எனக் குறிப்பதாக அமைகிறது. இது போல் பிறிதொரு கவிதையில்,

“துகிலென வாசனையையே

உடுத்தியிருக்கும் ஒருத்தியை

இரவுகள் துரத்துகின்றன

அவிழும் புதிர்களை

விரும்புகிற அவளுக்கு

புதிர்கள் அற்ற இரவுகள்

வெறுமையானவை

உடல் திறக்கும் அகிலின் வாசனையும்

மனம் விரும்பும் விடையொன்றுமாக

புதிய இரவொன்றை

கடந்து கொண்டிருக்கிறாள்”

என்னும் கவிதையில் துகில், வாசனை, உடுத்துதல், இரவு என்பன பாலியல் வேட்கையைக் குறிக்கும் சொற்கள் ஆகும். அவிழும் புதிர்கள் என்பது அமுக்கப்பட்ட வேட்கை எனப் பொருள்படும். அவற்றை இரவில் விரும்பாத பெண் எனக் குறிப்பிடுவது. இரவில் வேட்கையை அடக்கி வைப்பதை விரும்பாத அவளுக்கு வேட்கை நிறைவேற்றம் அடையாத போது வெறுமையான இரவாக மாறி விடுகிறது. வேட்கை நிறைவேற்றத்திற்கு அடிப்படையாக உடல் அமைகிறது. உடலின் வேட்கையை

நிறைவேற்றும் தன்மதனத்தில் ஈடுபட்டு இரவைக் கடக்கின்றாள் எனக் கவிதை கூறுவதை அவதானிக்கலாம் (Sakthi Jothi, 2016).

“உடைந்து சிதறும் இரவுகளை

இதற்கு முன்பும் கடந்து வந்திருக்கிறாள்

அப்போதெல்லாம்

கண்ணீரில் நனையாத தலையணையில்

முகம் புதைத்து

உறக்கம் தொலைத்த விழிகளினால்

சோர்வடைந்திருக்கிறாள்”

என்ற கவிதையும் பெண்ணின் வேட்கை நிறைவேற்றமின்மையும் நனவிலியில் அமுக்கப்பட்ட விருப்பங்களாகவும் அமைகின்றன. உடைந்து சிதறும் இரவென்பது பெண்ணின் விருப்பார்வம் குலைவதைக் குறிக்கிறது. வேட்கை எழும் போதெல்லாம் சமூகம் அதைத் தடுத்து அவளை சோர்வாக்கியிருக்கிறது எனக் கூறுவதாகப் பாடல் அமைகிறது (Sakthi Jothi, 2016).

## முடிவுரை

சக்திஜோதியின் கவிதைகளில் பாலுந்தம் என்பது வெளிப்படையாகவும் உள்ளுறை இறைச்சி போன்றும் வெளிப்படுகின்றன. படைப்பாளியின் நனவிலியில் தேங்கிக் கிடக்கும் விருப்பங்கள், வேட்கைகள்தான் கனவாகவும், படைப்பாகவும் உருவாக்கம் பெறுகின்றன. படைப்பாளி எழுதும் போது நனவு மனத்தின் ஆதிக்கமும் அதில் நிகழும். கனவினைப் போன்றே படிமமாகக் கவிதைகள் அமைவதை சக்திஜோதியின் கவிதைகளில் காணமுடிகிறது. பாலுந்தச் செயல்பாடுகள் அமுக்கம் பெறுவதையே பெரும்பாலும் கவிதைப் பொருளாக்கியிருக்கிறார். பெண்ணின் இரவுகள், அவளது உடலின் வாதை, தன் மதனம் எனப் பாலுந்த நடவடிக்கைகள் கவிதைகளில் வெளிப்படுகின்றன.

## References

Nalangilli, A. (2019) Sanga Ilakkiyam, Parisal Veeliyeedu, Chennai, India.

Ravichandran, T.K. (2019) Kappiya Ulapaguppaivu, Alaikal, Veeliyeddu, Chennai, India.

Ravichandran, T.K. (2011) Sigmund Freud ulappagupaaivu, Alaikal, Veeliyeddu, Chennai, India.

Sakthi Jothi, (2009) Kadaloda Isaiththal, Uyir Ezhuthu, Chennai, India.

Sakthi Jothi, (2016) Kadaloda Isaiththal, Uyir Ezhuthu, Chennai, India.

Varatharajan, G. (2013) Thirukkural, Palaniyappa Brothers, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License